## கொம்பு சிலிக்கா உரம் (BD 501)

பையோடைனமிக் (உயிர் ஆற்றல் அல்லது உயிர்சக்தி) விவசாய முறை 1924–ம் வருடம் ஆஸ்திரியா நாட்டின் மேதையான டாக்டர் ரூடால்ஃப் ஸ்டெயினர் என்பவரால் சில விரிவுரைகளின் மூலம் விவசாய உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

இம்முறையில் கொம்பு சிலிக்கா உரம் (501 உரம் - Horn Silica BD 501) என்பது கொம்பு சாண உரத்திற்கு அடுத்தபடியாக உபயோகிக்க வேண்டிய முக்கிய உரமாகும்.

நம்முடைய விவசாய இடுபொருட்களில் எந்த ஒரு மாற்று முறை விவசாயத்திலும் மற்றும் இரசாயண முறை விவசாயத்திலும் பயன்படுத்தப்படாத, அதே சமயம் மிகவும் அவசியமான ஒரு சத்து இந்த சிலிக்கா சத்து.

### தேவையான பொருட்கள் :

1) இரண்டு அல்லது மூன்று கன்று ஈன்று இறந்த பசுமாட்டின் கொம்பு.

2) படிக அமைப்புக் கொண்ட நன்கு தூள் செய்யப்பட்ட சிலிக்கா கல் தூள்.

### தயாரிக்கும் முறை :

கொம்பில் நன்றாக பொடியாக்கப்பட்ட சிலிக்கா கல் தூளை சிறிதளவு தண்ணீர் சேர்த்து கூழ்ம நிலைக்கு மாற்றி நிரப்பவேண்டும்.

நிரப்பப்பட்ட கொம்பின் கீழ்பகுதி மேல்நோக்கி இருக்குமாறு 4–5 மணி நேரம் வைக்கவேண்டும்.

சிலிக்கா கல்தூள் நிரப்பிய கொம்பினை 1.5 அடி (45 செ.மீ.) ஆழக்குழி வெட்டி அதனுள் கொம்பின் அடிபாகம் கீழ்நோக்கி இருக்குமாறு புதைக்க வேண்டும்.

ஒவ்வொரு கொம்பையும் ஒரு இஞ்ச் இடைவெளி விட்டு புதைக்க வேண்டும்.

கொம்புகளை மார்ச் மாதம் கோடை காலம் ஆரம்பிப்பதற்கு முன் மேல்நோக்கு நாட்களில் புதைத்து பின் 5–6 மாதங்கள் கழித்து செப்டம்பர் மாதத்தில் வரும் மேல்நோக்கு நாட்களில் (உயிர்சக்தி வேளாண்மை காலண்டரை பார்க்க) எடுக்கவேண்டும்.

### குறிப்பு :

கொம்புகளை வளமான மண்ணில் தான் புதைக்க வேண்டும். வளம் குன்றிய மண்ணாக இருந்தால் குழியில் மட்கிய எருவினை கலந்து அதில் கொம்பினை புதைக்கவேண்டும். கொம்பு புதைக்கப்பட்ட குழி 5–6 மாதங்கள் ஈரப்பதம் உள்ளதாக இருக்கவேண்டும். கோடை மழை நீர் தேங்காதவாறு வடிகால் அமைக்கவேண்டும். கொம்புகளில் வண்ணம் (பெயிண்ட்) பூசப்பட்டிருந்தால் அதனை சுத்தம் செய்யவேண்டும்.

**சேமித்து வைக்கும் முறை :**

கொம்பிலிருந்து எடுக்கப்பட்ட கொம்பு சிலிக்கா உரத்தைக் நிழலில் நன்றாக உலரச் செய்து பிறகு கண்ணாடிப் பாட்டில்களில் போட்டு சூரிய ஒளி படுமாறு ஜன்னல் ஓரமாக வைத்து சேமிக்க வேண்டும்.

இவ்வாறு பாதுகாக்கப்பட்ட கொம்பு சிலிக்கா உரத்தை (BD 501) ஒரு ஆண்டு வரை சேமித்து வைத்து பயன்படுத்தலாம்.

**பயன்படுத்தும் முறை :**

ஒரு ஏக்கருக்கு 1 கிராம் கொம்பு சிலிக்கா உரத்தை 1 பிளாஸ்டிக் வாளியில் 15 லிட்டர் மழைநீர் அல்லது குளோரின் கலக்காத தண்ணீரில் கலந்து 1 மணி நேரம் சுழி வருமாறு வலது புறமாகவும், இடது புறமாகவும் கலக்கவேண்டும்.

இந்த உரக் கரைசலை கலக்கியபின் 1 மணி நேரத்திற்குள் காலை வேளையில் பயிர்கள் மற்றும் மரங்களின் மேல் புகை மண்டலம் போல் நுண்ணிய துளிகளாக விழுமாறு தெளிக்கவேண்டும். இதற்கு அதிக அழுத்தம் கொண்ட தெளிப்பானை பயன்படுத்தவேண்டும்.

**தெளிக்கவேண்டிய நாட்கள் மற்றும் நேரம்**

✻ காலை 5–30 – 7–30 மணிக்குள்

✻ மேல்நோக்கு நாட்கள்

✻ பௌர்ணமி நாள்

✻ சந்திரன் எதிர் சனி

கொம்பு சிலிக்கா சத்து செடிகளின் திடத்தன்மையை அதிகரிக்கச் செய்து பயிர்களில் நோய் தாக்காதபடி காக்க வல்லது.

செடிகளில் அதிகப்படியான ஈரப்பதம் உள்ள சமயத்தில் இந்த சிலிக்கா ஈரப்பதத்தை சீரமைத்து பூஞ்சான் நோய்களிலிருந்து காக்கிறது.

காய்கறிகள், பழங்கள் மற்றும் தானியங்களின் தரத்தையும் மற்றும் ருசி தன்மையையும் உயர்த்தும்.

செடியின் ஒளிச்சேர்க்கையினை அதிகப்படுத்தும்.

இந்த கொம்பு சிலிக்கா உரத்தை பயிரின் 4 இலைப் பருவத்தில் தெளிக்கலாம்.

பழ மரங்களில் காய்கள் பிஞ்சாக இருக்கும் போதும் மற்றும் அறுவடைக்கு 10–15 நாட்களுக்கு முன் தெளிக்கவேண்டும்.

**குறிப்பு :**

கொம்பு சிலிக்கா (BD 501) உரத்தை முதல் முறை தெளிப்பதற்கு முன் நிலத்திற்கு, ஒரு முறையாவது கொம்பு சாண உரத்தை (BD 500) தெளித்திருக்க வேண்டும்.